
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1221

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

64

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

கலைஞரின் திரைக்கதை வசனத்தில் வந்த இத்திரைப்படம், வழக்கமான ஒரு குடும்பத் திரைப்படம்தான். கணவன் மனைவிக்கு இடையிலான சந்தேகமும் அதனால் உறவில் ஏற்படும் விரிசலும் விவாகரத்தும் பற்றிய கதைதான் என்றாலும், கலைஞர் தனது சமூக, அரசியல் கண்ணோட்டத்துடன் எழுதியுள்ள வசனங்களால் இப்படம் குறிப்பிடத்தக்கதாக மாறுகிறது.

படத்தின் தொடக்கக் காட்சியிலேயே, மிக நுணுக்கமாக ஒரு செய்தியைக் கலைஞர் பார்வையாளர் மனதில் பதியவைக்கிறார். கதாநாயகனான கட்டட இன்ஜினீயர் சத்தியமூர்த்தியிடம் (சிவக்குமார்) வேலையாள் ஜமால் வந்து, “முதலாளி வருகிறார்” என்கிறான். முதலாளி ஆபிரகாம் வந்து சத்தியமூர்த்தியிடம் மிகவும் அன்பாக, கட்டட வேலை குறித்து விசாரித்துவிட்டுப் போகிறார்.

மிகச் சாதாரணமான ஒரு காட்சிதான். ஆனால், படத்தின் தொடக்கத்தில் ஒரே ஒரு முறை வந்துபோகும் கதாபாத்திரங்களுக்கு ஜமால், ஆபிரகாம் என்கிற பெயர்களை வைத்ததன்மூலம் இந்துக்களும் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் கலந்து ஒருவருடன் ஒருவர் உறவாடி வாழ்வதுதான் நமது தமிழர் வாழ்க்கை முறை என்பதை இயல்பான ஒன்றாக மக்கள் மனதில் பதியவைக்கிறார். ஜமால், ஆபிரகாம் என்கிற பெயர்களைத் தவிர்த்துவிட்டு, இந்துப் பெயர்களைச் சூட்டியிருந்தாலும் படத்தின் கதைக்கு எந்த பாதிப்பும் இல்லை என்பதை சிந்தித்தால், கலைஞரின் நுணுக்கத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

தமிழ் சினிமாவுக்கு என்று ஒரு மரபு இருக்கிறது. அதாவது, நகைச்சுவை கதாபாத்திரங்கள்தான். நாயகன், நாயகி முதல் வில்லன் வரை அனைவரது தவறுகளையும் கேலி, கிண்டல் என்கிற வடிவத்தில், தொடர்ந்து விமர்சித்துவருவதைக் காணலாம். அவ்வாறு இத்திரைப்படத்தில் ஆரோக்கியசாமி (எஸ்.எஸ்.சந்திரன்), காமாட்சி (மனோரமா) என்கிற கதாபாத்திரங்கள் வருவதுடன், ஆரோக்கியசாமி கூடுதலாகக் கலைஞர் எழுதித் தந்த அரசியல் விமர்சனங்களை நையாண்டிகளாகப் படம் முழுதும் தூவிச்செல்கிறார்.

மேலும், காமாட்சி (மனோரமா) ஒரு பார்ப்பனப் பெண் என்பதையும் ஆரோக்கிய சாமியும் காமாட்சியும் காதல் திருமணம் செய்துகொண்டவர்கள் என்பதையும் காட்சிப்படுத்தி, அவர்களுக்கு இடையே உணவு விசயத்தில் (சைவம் X அசைவம்) தினசரி சண்டை சச்சரவு நடைபெறுவதையும் காட்சிப்படுத்தியுள்ளனர். இதுவும் கலைஞரின் சமூக அரசியல் கண்ணோட்டம் சார்ந்த காட்சிப்படுத்தல்கள்தான் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது.

### சைவமா, அசைவமா?

ஒரு காட்சியில் சைவமா, அசைவமா? எது சரி? என்கிற விவாதம் நடைபெறும்.

**காமாட்சி** : தொலைச்சுப்புடுவேன் தொலைச்சு! என்ன தைரியம் இருந்தா இந்த மாதிரி கோழி, சேவலை எல்லாம் ஆத்துக்குள்ளே கொண்டு வருவேள்?

**சாரதா (ராதிகா)** : என்னம்மா சண்டை?

ஆரோக்கியசாமி: வழக்கம் போல கோழிச்சண்டைதான். நான் கோழிங்கிறேன். அவ காலிஃபிளவர்ங்கிறா.

அவ்வளவு ஏன் சாரதா, முட்டைக்கோஸ முழுசா சொல்ல விடமாட்டேன்கிறா.

**சாரதா** : ஏன்?

**ஆரோக்கியசாமி** : அதுல முட்டை வருதாம். கோஸுன்னு சொல்லணும்ங்கிறா.

**காமாட்சி** : ஏன் கோஸுன்னு சொன்னா நான் புரிஞ்சுக்க மாட்டேனா? முட்டைக் கோசுன்னுதான் சொல்லணுமா?



**ஆரோக்கியசாமி** : எங்கே மேய விடுறீங்க?

**சத்தியமூர்த்தி** : சைவம் சில பேர் சாப்பிடு வாங்க. அசைவம் சில பேர் சாப்பிடுவாங்க. ஒவ்வொருத்தருக்கும் ஒரு நாக்கு.

**ஆரோக்கியசாமி** : சில அரசியல்வாதிகளுக்கு மட்டும் ரெண்டு நாக்கு.

**காமாட்சி** : சித்த நேரம் வாய வச்சுக்கிட்டு சும்மா இருக்கமாட்டேளா?

**ஆரோக்கியசாமி** : ஒரு வாரம் வாய வச்சுக்கிட்டு சும்மா இருந்தேன் சார்... அப்புறம்தான் கோழியே தின்னேன்.

**காமாட்சி** : ம்... பார்த்தேளா? வாயத் திறந்தா வாய்க்குள்ள இருந்து கோழிதான் வரும்.

**ஆரோக்கியசாமி** : சில நேரங்கள்ல வாய்க்குள்ள இருந்து கொட்டாவியும் வரும்.

**காமாட்சி** : இருங்கோ, நாளைக்கு அந்த வாயத்

படங்கள் உதவி : ஞானம்





# 'பாடாத தேனீக்கள்'

## கலைஞர் பேசிய உணவு அரசியல்!

நீங்களே சொல்லுங்க, எத்தனை தரம் நான் மிலிட்டரி சாப்பாடு சாப்பிட மாட்டேன், நான் மிலிட்டரி சாப்பாடு சாப்பிட மாட்டேன்னு என் கையில அடிச்சு சத்தியம் பண்ணுனார். இன்னைக்கு என்னடான்னா அதையெல்லாம் மறந்திட்டு, கோழியை ஆத்துக்குள்ளயே கொண்டு வந்துட்டார். நீங்களும் பக்கத்து ஆத்துலதானே இருக்கேள் ஆம்படையானும் பொண்டாட்டியும் எவ்வளவு ஒற்றுமையா இருக்கேள். உங்களுக்குள்ளே ஒரு சின்னத் தகராறு வருதா?

**ஆரோக்கியசாமி** : அவுங்களுக்குள்ளே எப்படித் தகராறு வரும்? அவுங்க ரெண்டு பேரும்தான் அசைவமாச்சே. என்னைச் சொல்லணும், ஆரம்பத்துலயே ஒரு அசிங்கத்த கல்யாணம் பண்ணியிருந்தா...

**காமாட்சி** : ம்...

**ஆரோக்கியசாமி** : இது.... ஒரு அசைவத்த கல்யாணம் பண்ணியிருந்தா, இந்த வம்பே வந்திருக்காது.

**காமாட்சி** : இந்தப் புத்தி அப்பவே வந்திருக்கணும்

ஆரோக்கியசாமி : எப்பவே?

**காமாட்சி** : என்னைய லவ் பண்ணும்போது. அப்ப மட்டும் டீ காமாட்சி, என் கண்ணு நான் உன்னைய கல்யாணம் பண்ணிண்டா ஆட்டுக்கறி திங்க மாட்டேன், மாட்டுக்கறி திங்க மாட்டேன், கோழிக்கறி திங்க மாட்டேன் ஏன்? கோலி சோடாகூட குடிக்க மாட்டேன்னு சொன்னேளே... அந்தப் புத்தி இப்ப எங்கே மேயப் போய்டுத்து?

> **உணவுத் தடை விதிக்கும் சங் பரிவார் கும்பலுக்கு 1988-ஆம் ஆண்டிலேயே ‘பாடாத தேனீக்கள்’ வழி பதில் சொல்லி இருக்கிறார் கலைஞர்.**

தெச்சுடுறேன். இதப் பாருங்கோ... சாப்பிடுறதுக்காக கடவுள் ஆடு, மாடு, கோழிகளைப் படைக்கல.

**ஆரோக்கியசாமி** : சிங்கம், புலி, கரடில்லாம் திங்கிறதுக்கு கடவுள் எதைப் படைச்சிருக்காரு?

ஆ... மாட்டிக்கிட்டா மாட்டிக்கிட்டா... நம்ம கையிலேயும் கொஸ்டின் இருக்கு சார்.

**காமாட்சி** : ஆஹ்... பெரிய கொஸ்டின். மனுஷாள் சாப்டுறதுக்காக ஒண்ணும் கடவுள் உயிருள்ள ஜீவராசிகளைப் படைக்கலை. காய்கறிகளைத்தான் படைச்சிருக்கார்.

**ஆரோக்கியசாமி** : மரம், செடி, கொடிக் கெல்லாம் உயிர் இருக்குன்னு சொல்றாங்களே அதையும் திங்கிறீங்களே?

ஆ... மறுபடியும் இவ மாட்டிக்கிட்டா

**காமாட்சி** : வாயை மூடுங்கோ. ஆடு மாடு கோழிகளைச் சாப்பிட்டோம்னா அது களுக்கு உயிர் போய்டுறதுண்ணா... ஆனா, கத்திரிக்காயப் பறிச்சா செடி சாகிறதில்ல, பரங்கிக் காயப் பறிச்சா கொடி சாகிறதில்ல, மாங்காயப் பறிச்சா மரம் சாகிறதில்லை.

**ஆரோக்கியசாமி** : கீரைத்தண்டை மட்டும் அடியோட பறிச்சு, சாம்பார் வச்சு திங்கிறீங்களே அப்ப எது சாகுது? ஆங்... இது எப்படி இருக்கு?

**காமாட்சி** : இப்படித்தான்... இப்படித்தான் வாயத் திறந்தா குதர்க்கமாகவே பேசுவார்.

**சாரதா** : அவர் கேட்கிற கேள்வி நியாயம்தானே? பதில் சொல்லுங்க.

**காமாட்சி** : என்னத்த பதில் சொல்லச் சொல்றே? என்று கோபப்படுகிறார்.

உணவு பற்றிய இப்படியொரு விவாதம் இதுவரை வேறு எவர் வசனம் எழுதிய தமிழ் சினிமாவிலும் இடம்பெற்றதில்லை. உணவுத் தடை விதிக்கும் சங் பரிவார் கும்பலுக்கு 1988-ஆம் ஆண்டிலேயே ‘பாடாத தேனீக்கள்’ வழி பதில் சொல்லி இருக்கிறார் கலைஞர். அதிலும் கூடுதல் சிறப்பு, ‘ஆடு மாடு கோழி’ என மூன்றையும் சமமாக முன்வைத்து இவ்வுரையாடலை கலைஞர் எழுதியிருப்பது அற்புதமாகும்.

**...காட்சி விரியும்**

---

## தி.மு.க.வுக்கு இன்று முன்னணிப் பாத்திரம் உள்ளது!

தேர்தலுக்குப் பிறகு, அணி மாறியிருக்கும் காங்கிரஸின் துரோகத்தைக் கண்டித்து, ஜூன் 8 அன்று டெல்லியில் நடைபெறவுள்ள இந்தியா கூட்டணி ஆலோசனைக் கூட்டத்தில் தி.மு.கழகம் பங்கேற்காது என அறிவித்துள்ளது.

இந்தியா கூட்டணியில், காங்கிரஸ் மீது துளியும் நம்பிக்கையற்ற திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாடி, ராஷ்ட்ரிய ஜனதா தளம் போன்ற பல கட்சிகளை இணைக்கும் புள்ளியாகத் தி.மு.கழகமே இருந்தது. இப்போது, தி.மு.கழகமே காங்கிரஸை கூட்டணியில் சேர்க்கக் கூடாது, காங்கிரஸ் இருக்கும் அணியில் இருக்க மாட்டோம் என்று தெளிவுபடுத்திவிட்ட நிலையில், பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் அல்லாத ஓர் அணியை தி.மு.கழகம் முன்னின்று உருவாக்க வேண்டுமென்று, சமூக வலைதளங்களில் எண்ணற்றோர் எழுதிவருகின்றனர்.

இது தொடர்பாக, பதிவிட்டுள்ள எழுத்தாளர் யமுனா ராஜேந்திரன், “இந்தியா கூட்டணியை முன்னெடுத்ததில் தி.மு.க.வே முன்னோடி கட்சி. மொழி, கல்வி, மருத்துவம், நிதி என மாநில-மத்திய அரசு சார்ந்த பல கொள்கைகளில் பி.ஜே.பி.க்கும் காங்கிரஸுக்கும் வேறுபாடுகள் வெகுசொற்பம். இந்துத்துவாவை எதிர்ப்பதில், காங்கிரஸை மையப்படுத்தி அரசியல் செய்வதில், பிரச்சினையை உருவாக்கியவர்கள் அவர்களேதான். ராகுல் காந்தியின் பி.ஜே.பி.-ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்பு என்பது மோடி எனும் தனிநபர் வெறுப்பாகக் குறுகியதல்லாமல், அவரது சொற்கள் எதுவும் காங்கிரஸின் கொள்கையாக ஆகவில்லை. மாநில நலன்களைப் புறந்தள்ளிய சுயநலத் தலைமை வெறிகொண்ட கட்சியாக அது ஆகியிருக்கிறது. மாநில நலன்களைக் கவனம் கொண்ட கட்சிகளைத் திரட்டி, பி.ஜே.பி. - காங்கிரஸ் என இரண்டுக்கும் மாற்றான ஓர் இந்திய அணியை உருவாக்குவதில்தான் தி.மு.க.வுக்கு இன்று முன்னணிப் பாத்திரம் இருக்கிறது” என்று கூறியுள்ளார்.

அதேபோல, தமிழ்நாட்டில் தேர்தலுக்கு முன்பு, தி.மு.க.விடம் இருந்து ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவியைப் பெற்ற காங்கிரஸ், தற்போது இணைந்திருக்கும் புதிய அணியிலும் ஒரு மாநிலங்களவை உறுப்பினரைப் பெற்றிருக்கிறது. அந்தப் புதிய உறுப்பினர், அவரே தன்னிச்சையாகக் கூட்டணிக்கு ஒரு பெயரை அறிவித்திருக்கிறார். அதைக் கண்டித்து, நிராகரித்துள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள், ‘ஆட்சியமைக்கக் கொடுத்த ஆதரவு, கூட்டணியல்ல’ என்று தெளிவுபடுத்தியுள்ளனர். சமூக வலைதளங்களில் எழும் குரலுக்கு வலுசேர்ப்பதாகவே இது அமைந்துள்ளது.

---

## ஃப்ளாஷ்பேக்





ரியாஸ் முஹம்மது

### தலைவர் தந்த வாழ்த்து!

கழகத்தின் சட்டத் துறை இணைச் செயலாளராக இருந்தவர், என் தந்தை வழக்கறிஞர் ஷாஜகான். அவருடன் சென்று பலமுறை முத்தமிழறிஞரைப் பார்த்துள்ளேன். 2011-ஆம் ஆண்டில் நான் மருத்துவப் படிப்பில் தேர்ச்சிபெற்றதும், தலைவரைச் சந்தித்து வாழ்த்து பெறச் சென்றிருந்தேன். தலைவர் என் கன்னத்தைக் கிள்ளி வாழ்த்தியது, நான் பெற்ற பேறு. வாழ்வில் எல்லா கட்டத்திலும் கழக உணர்வே என்னை வழிநடத்திக்கொண்டிருக்கிறது என்பதில் பெருமைப்படுகிறேன்.

**- மருத்துவர் ரியாஸ் முஹம்மது,**
**மருத்துவ அணித் தலைவர், சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## கருவூலம்

### சிவாஜியைப் பரிந்துரைத்த நடிகமணி!

1945-ஆம் ஆண்டு டிசம்பர் 15 அன்று, சென்னை அரண்மனைக்காரத் தெருவில், செயின்ட் மேரி மண்டபத்தில், பெரியார் தலைமையில் நடைபெற்ற சென்னை மாவட்ட சுயமரியாதை மாநாட்டில், பேரறிஞர் அண்ணாவின் ‘சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்’ நாடகம் நடைபெற்றது. இந்த நாடகத்தில் நடிக்க எம்.ஜி.ஆர். மறுத்ததால், வேறு நடிகர்களை அண்ணா தேடிக்கொண்டிருந்தார். அப்போது, சிவாஜி கணேசனை அண்ணாவிடம் பரிந்துரைத்தவர் நடிகமணி டி.வி.நாராயணசாமி ஆவார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900